


நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 115 | 20.10.2025 | MONDAY | IPPASI : 3 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 115 | 20.10.2025 | திங்கள்கிழமை | ஐப்பசி : 3 | விலை : ரூ.5/-



3 தீபாவளி பண்டிகை களைகட்டியது: 3 நாட்களில் 14 லட்சம் பேர் பயணம்

4 நேரடி நெல் கொள்முதலில் திமுக நாடகம்; விவசாயிகளுக்கு இது கண்ணீர் தீபாவளி: இபிஎஸ்

2 கரூர் மண்டலத்தில் புதிய 5 தாழ்தள நகரப் பேருந்துகள் சேவை: செந்தில்பாலாஜி தொடங்கி வைத்தார்


# தீபாவளி பண்டிகை: இபிஎஸ் உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து!

சென்னை: அக்.20-

தீபாவளி பண்டிகைக்கு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தீபாவளி பண்டிகைக்கு வாழ்த்து தெரிவித்த அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, 'மக்கள் அனைவரும் கொண்டாடி மகிழும் பண்டிகைகளில், சிறப்பு மிக்க பண்டிகையாம் தீபாவளித் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் அனைவருக்கும் எனது உளங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.


நரகாசுரன் எனும் கொடிய அரக்கனை மகாலட்சுமி துணையுடன், திருமால் அழித்த தினமே தீபாவளி பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. இந்தத் திருநாள் இருளை நீக்கி, ஒளியை ஏற்றிடும் தினமாகவும்; தீமைகள் அகன்று நன்மைகள் பெருகும் நாளாகவும் விளங்குகிறது. இந்த இனிய நன்னாளில் மக்கள் அனைவரும் தங்களது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தும் வகையில், தங்களது இல்லங்களை அலங்கரித்தும்; தீபங்களை ஏற்றி வைத்தும்; புத்தாடைகளை அணிந்தும்; உற்றார் உறவினர்களுடன் பட்டாசுகளை வெடித்தும்; இனிப்புகளைப் பகிர்ந்து உண்டும்; உற்சாகத்துடனும், குதூகலத்துடனும் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

இந்த இனிய திருநாளில், நாடெங்கும் அன்பும் அமைதியும் தழைக்கட்டும்; துன்பங்கள் கரைந்து ஒளிமயமான எதிர்காலம் பிறக்கட்டும்; வேற்றுமை அகன்று ஒற்றுமை ஓங்கட்டும்; அனைவரது வாழ்விலும் வளமும், நலமும் பெருகட்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து, அனைவருக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரது தூய வழியில், இனிய தீபாவளி நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக்கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

தீபாவளிக்கு தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்ட வாழ்த்து செய்தியில், 'தீமையின் மீது நன்மையும், இருளின் மீது ஒளியும் வெற்றி பெற்றதைக் குறிக்கும் வகையில் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது. சாதி, மத, இன வேறுபாடுகளை கடந்து அனைவரும் இணைந்து தீபாவளி திருநாளை மகிழ்ச்சியோடு கொண்டாடி வருகிறார்கள்.

மக்களை மதரீதியாக பிளவுபடுத்தி, அரசியல் ஆதாயம் தேடுகிற வகையில் ஆட்சி நடத்தி வருகிற பாஜக.விற்கு மக்கள் பாடம் புகட்டும் நிலை உருவாகி வருகிறது. தீமையை வதம் செய்த தீபாவளித் திருநாளில் வகுப்புவாத நச்சு சக்திகள் வீழ்த்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும் வகையில் தீபாவளி திருநாளை கொண்டாடுவோம்.

பாதுகாப்பான தீபாவளியைக் கொண்டாடுங்கள். வழக்கம் போல் மற்ற மதத்தவர்களோடு வாழ்த்துகளையும் இனிப்புகளையும் பகிர்ந்து கொள்வோம். வெறுப்புணர்வு வளர்த்தெடுக்கப்பட்டுள்ள சூழலில்,



இந்த தீபாவளி பண்டிகையை மத நல்லிணக்கத்தின் அடையாளமாகக் கொள்வோம். தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்' எனத் தெரிவித்துள்ளார்

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், 'இருளை விலக்கி, ஒளி கொடுக்க வரும் தீபஒளித் திருநாளை தமிழ்நாட்டிலும், உலகின் பிற பகுதிகளிலும் கொண்டாடும் அனைவருக்கும் எனது உளமார்ந்த தீப ஒளி வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தீபஒளித் திருநாள் என்றாலே மகிழ்ச்சியும், கொண்டாட்டமும் தான் நினைவுக்கு வரும். புத்தாடை அணிந்து, மத்தாப்புக் கொளுத்தி, பிற மத நண்பர்களுக்கும், அண்டை வீட்டாருக்கும் இனிப்பு வழங்கும் வழக்கம் நட்பை வலுப்படுத்துவதுடன், நல்லிணக்கத்தையும் தழைக்கச் செய்கிறது. இது தான் தீப ஒளித் திருநாளின் சிறப்பு ஆகும்.

தீமையை நன்மை அழித்ததன் கொண்டாட்டம் தான் தீப ஒளித் திருநாள் என்று கூறப்படுகிறது. அந்த வகையில் பார்த்தால் இந்த ஆண்டு தீப ஒளித் திருநாள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையில் ஒளி கிடைக்க அழிக்கப்பட வேண்டிய தீமைகள் ஏராளமாக உள்ளன. அவற்றில் முதன்மையானது மக்களை சீரழிக்கும் தி.மு.க ஆட்சிக்கு முடிவுரை எழுதுவது மட்டும் தான்.

விலைவாசி உயர்வு, வரிக்கொடுமை, வேலைவாய்ப்பின்மை, சட்டம் - ஒழுங்கு சீர்குலைவு என அழிக்கப்பட வேண்டிய சக்திகள் ஏராளமாக உள்ளன. அவை அனைத்தையும் அகற்றுவதற்கான தீர்வு உங்களின் கைவிரல் நுனியில் தான் உள்ளன. அதை ஒருமுறை செய்தால் தமிழ்நாட்டில் இருள் இன்றுடன் முடிவுக்கு வரும்' எனத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் விடுத்துள்ள அறிக்கையில், " இந்த தீபாவளியில் வலிமையான பாரதம் அமைந்திருப்பதால் அடுத்த தீபாவளிக்கு வளமான தமிழகம் அமைய வேண்டும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும், உள்நாட்டின் அமைதிக்கும் எடுத்துக்காட்டாக பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் ஆளுமைத்திறன் தீபாவளி ஒளியாக அமைந்து நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்திருக்கிறது.

அதே போல அடுத்த ஆண்டின் தீபாவளியில் வளமான தமிழகம் அமைந்திருக்க இருள்நீக்கி ஒளி தரும் தீபாவளி நல்வழிக் காட்டட்டும். தமிழக மக்களுக்கு சுமைகள், தீமைகள் நீங்கி, நன்மைகள் நிறைந்து, இன்பங்கள் மிகுந்து, வாழ்வு சிறக்கும் வகையில் தீபாவளி திருநாள் அமைய வேண்டும்' எனத் தெரிவித்தார்.

மஜக தலைவர் தமிமுன் அன்சாரி வெளியிட்ட வாழ்த்து செய்தியில், ' இந்தியாவின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றாக திகழ்கிறது தீபாவளி திருநாள்.வீடுகள் தோறும் பூத்தரி தெறிக்கும் மாலைப்பொழுதுகளும், வீதிகளெங்கும் வான வேடிக்கைகள் நடைபெறும் இரவுப்பொழுதுகளும், தீபாவளி கொண்டாட்டத்தை முன்னிறுத்துகின்றன.

இன்பங்கள் நிறைந்த இந்நாளில் நாடு வளம் பெறவும்; சமூக நல்லிணக்கம் வலிமை பெறவும் உறுதி ஏற்போம். வேற்றுமையில் ஒற்றுமை என்ற கலாச்சாரத்தை பாதுகாப்போம். தீபாவளி கொண்டாடும் உறவுகள் அனைவருக்கும் மனிதநேய ஜனநாயக கட்சியின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்' எனத் தெரிவித்துள்ளார்.

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில், 'தீபங்களின் திருவிழாவான தீபாவளி பண்டிகையை உற்சாகமாகக் கொண்டாடும் தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த தீபஒளித் திருநாள் நல் வாழ்த்துகள்.

இயந்திர வாழ்க்கையில் சந்திப்புகள் குறைந்து போன உறவுகள் கூடிக் குலவவும், உள்ளங்கள் மகிழ்ந்துறவாடவும் விழாக்கள், கொண்டாட்டங்கள் ஊக்கமளிக்கின்றன. பண்பாடு, கலாச்சாரம், பாரம்பரியத்தை பாதுகாக்கும் பண்டிகைகள் மனிதர்கள் வாழ்வில் மலர்ச்சியையும், புத்துணர்ச்சியையும் ஏற்படுத்துகின்றன.

மக்களிடையே மனித நேயம் மலர்ந்திட, மாற்றங்கள் தொடர்ந்திட, சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம் நிலைத்திட, அன்பு, அமைதி, வளம், வளர்ச்சி, ஒற்றுமை பெருகிட, இல்லாமை எனும் இருள் விலகி, இன்ப ஒளி பிரகாசித்து, இல்லங்களிலும், உள்ளங்களிலும் அன்பும், ஆனந்தமும் செழித்து, மக்கள் யாவரும் மாசில்லா தீபாவளியை மகிழ்ச்சியோடு கொண்டாட உலகத் தமிழர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த தீப ஒளி திருநாள் நல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்

## பிஹார் தேர்தல்: அக்.24ல் பிரச்சாரத்தை தொடங்குகிறார் பிரதமர் மோடி

பாட்னா: அக்.20-

மொத்தம் 243 உறுப்பினர்களைக் கொண்ட பிஹார் சட்டப்பேரவைக்கு நவம்பர் 6, 11 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது.



இதனையொட்டி பிரதமர் மோடி அக்.24ல் பிரச்சாரத்தை தொடங்குகிறார். இது குறித்து பாட்னாவில் இன்று (ஞாயிறு) செய்தியாளர்களை சந்தித்த பாஜக மாநிலத் தலைவர் திலீப் ஜெய்ஸ்வால், "பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி பிரதமர் நரேந்திர மோடி அடுத்த வாரம் பிரச்சாரத்தை தொடங்குகிறார். இந்த மாத இறுதிக்குள் 4 பிரச்சாரப் பேரணிகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளது. முதலில் வரும் 24ம் தேதி சமஸ்திபுராவில் பிரச்சாரம் செய்கிறார். அன்றைய தினமே, பெகுசராயில் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்கிறார்." என்றார்.

பிஹார் தேர்தலில் பாஜக மற்றும் ஜேடியு கட்சிகள் இரண்டும் தலா 101 இடங்களில் போட்டியிடுகின்றன. மத்திய அமைச்சர் சிராக் பாஸ்வான் தலைமையிலான லோக் ஜனசக்தி கட்சி (ராம் விலாஸ்) 29 இடங்களில் போட்டியிடுகிறது. உபேந்திர குஷ்வாஹா தலைமையிலான ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா (ஆர்எல்எம்) மற்றும் மத்திய அமைச்சர் ஜிதன் ராம் மஞ்சி தலைமையிலான இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா (மதச்சார்பற்ற) ஆகிய கட்சிகளுக்கு தலா ஆறு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.


சக்கர வியூகம்

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்


தொடர்ந்து எங்களுக்கு பேராதரவினை நல்கி வரும் வாசகர்களுக்கும் விளம்பரதாரர்களுக்கும்

இனிய தீபாவளி வாழ்த்துக்கள்


## அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் திட்டத்தில் 34 மாதங்களில் 3 இலட்சம் பேர் பங்கேற்பு

மதுரை, அக்.20-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்து அறநிலையத்துறை சார்பில் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், ராமேஸ்வரம் ராமநாதசுவாமி, திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் உள்ளிட்ட கோவில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். மதுரை மாவட்டம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் திட்டம் துவங்கி சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் பயனடைந்து இருக்கின்றனர்.



இறையருள் பெற திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு உணவளிக்கும் அன்னதானம் திட்டம் தமிழகத்தில் வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள 154 கோயில்களில் மதிய வேலைகளில் மட்டும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி கோயில், பழனி தண்டாயுதபாணி சுவாமி ஆகிய கோயில்களில் நாள் முழுவதும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தினை விரிவு படுத்திடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16ஆம் தேதி திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோயில், சமயபுரம் மாரியம்மன் கோயில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில் ஆகிய திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். இதன் தொடர்ச்சியாக மதுரை மீனாட்சி அம்மன் கோயில் உட்பட 3 கோயில்களிலும் நாள் முழுவதும் அன்னதானம் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ் பக்தர்களுக்கு காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலில் நாள்தோறும் சுமார் 3500 க்கும் மேற்பட்ட பக்தர்கள் அன்னதானம் பெற்று வருகிறார்கள். கடந்த 34 மாதங்களில் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் இத்திருக்கோயிலில் அன்னதானம் திட்டத்தால் பயன் அடைந்துள்ளனர். மேலும் இங்கு தரமான உணவு வழங்கப்படுவதை கண்காணிக்க தனி அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த ஜெயலெட்சுமி தெரிவிக்கையில்,

தமிழக கோயில்களில் அன்னதானத் திட்டம் மிகவும் சிறப்பாக உள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த பல திட்டங்களில் இது மிகச் சிறப்பானது. இந்த திட்டத்தால் பலர் பயன்பெற்று வருவது பெருமையாக உள்ளது. பழனி முருகன் கோவிலில் அன்னதானத்தில் பங்கேற்றுள்ளேன். அதேபோல் தரத்தில், சுவையில் சிறந்ததாக மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் உணவு வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் தரிசனத்திற்கு பிறகு குடும்பத்தினருடன் அன்னதானத்தில் பங்கேற்பது மன நிறைவு மற்றும் மகிழ்ச்சியை தருகிறது. கோயிலில் வழங்கப்படும் உணவை நாங்கள் கோயிலின் பிரசாதமாக பார்க்கிறோம், இத்தகைய திட்டத்தை தொடங்கி வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.



# மேட்டூரில் வீரப்பன் மகள் போட்டி: சேலத்தில் 6 தொகுதிகளுக்கு வேட்பாளர்களை அறிவித்தார் சீமான்

மேட்டூர், அக்.20-

சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டப்பேரவை தொகுதிகளில் 6 தொகுதிகளுக்கான வேட்பாளர்களை நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவித்தார். மேட்டூர் தொகுதிக்கு வீரப்பன் மகள் வித்யா வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

நாம் தமிழர் கட்சி சார்பில் சேலம் மாவட்டம் மேட்டூரில் அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் 'வீரபெரும்பாட்டன் தீரனும் அவன் பேரனும்' என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பேசிய சீமான், "நாட்டை ஆளுகிற ஆட்சியாளர்கள், வெகுவான மக்கள் பார்வையிலே வீரப்பன் ஒரு கொள்ளைக்காரன், திருடன் சந்தன மரத்தை கடத்தியவன். உண்மையிலேயே வீரப்பன் வனக்காவலன். வீரப்பன் திருடன் என்றால் அவர்கள் திருடிய சொத்துக்கள் எங்கே? அவருடைய மாளிகைகள் எங்கே?.

கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தவர்களுக்கும், நடிகனை பார்க்கச் சென்று உயிரிழந்தவர்களுக்கும் இந்த அரசு பணத்தையும் வேலையும் கொடுக்கிறது. ஆனால் மின்னல் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தைப் பார்க்க நாதியில்லை. வனத்தில் கால்நடைகளை மேய்ப்பதால் வனவிலங்குகளுக்கு ஆபத்து எனக் கூறுபவர்களுக்கு, குவாரிகள் வெட்டி எடுப்பதால் ஆபத்து இல்லையா?.

நிறைய தேர்தல்களில் நாங்கள் தோற்று இருக்கிறோம். தேர்தலில் வெற்றி மட்டுமே வெற்றி அல்ல. தேர்தலில் வென்றவன் சாதித்ததை விட தேர்தலில் தோற்ற எங்கள் பிள்ளைகள் சாதித்து இருக்கின்றோம். நான் நினைத்தால் பணத்தை வாங்கிக் கொண்டு சீட்டு கொடுக்க முடியும். அதை செய்கிறவனாக இருந்தால் இந்த இடத்தில் நின்று தீரனும் அவன் பேரனும் என்று பேச மாட்டேன். சிஎம் சார் என்னை எது வேண்டுமானாலும் செய்யுங்கள் என்று சீரியசாக காமெடி செய்கிறார்கள். 8 வழிச் சாலை, பரந்தூர் விமான நிலையம் கட்டுங்கள் பார்ப்போம், சாகத் துணிந்தவனுக்கு எல்லாம் சாதாரணம்" என்றார்

சேலத்தில் 6 தொகுதிக்கு வேட்பாளர் அறிவிப்பு:

நாம் தமிழர் கட்சி சார்பில் வரும் 2026 தேர்தலில், சேலம் மாவட்டத்தில் 6 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிவித்தார். மேட்டூர் சட்டப்பேரவை தொகுதியில் வீரப்பனின் மகள் வித்யா வீரப்பன், சங்ககிரி தொகுதியில் நித்யா அருண், வீரபாண்டி தொகுதியில் ராஜேஷ் குமார், சேலம் மேற்கு தொகுதியில் சுரேஷ்குமார், கெங்கவல்லி தொகுதியில் அபிராமி, ஆத்தூர் தொகுதியில் மோனிஷா ஆகியோர்கள் போட்டியிடுவார்கள் என சீமான் அறிவித்தார்.

பிப்ரவரி 7ம் தேதி திருச்சியில் நடைபெறும் இன எழுச்சி மாநாட்டில் 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்கள் அறிவிக்க உள்ளதாகவும், தற்போது அறிவித்த வேட்பாளர்களுக்கு விவசாயி சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும் எனவும் சீமான் கேட்டுக்கொண்டார்.

# கரூர் நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தவெக சார்பில் தலா ரூ.20 லட்சம் நிவாரண உதவி வழங்கல்



கரூர், அக்.20-

கரூரில் தவெக பிரச்சார கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் வங்கிக் கணக்குகளில் தவெக சார்பில் நேற்று தலா ரூ.20 லட்சம் வரவு வைக்கப்பட்டது.


கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப். 27ம் தேதி தவெக தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். மேலும், 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த உயர் நீதிமன்றம் உத்தரவிட்டதன்பேரில் ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டது. கடந்த 5ம் தேதி கரூர் வந்த இக்குழுவினர், பல்வேறு தரப்பினரிடம் விசாரணை நடத்தினர். இதனிடையே, இந்த வழக்கை சிபிஐக்கு மாற்றி கடந்த 13ம் தேதி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து,ஐபிஎஸ் அதிகாரி பிரவீண்குமார் தலைமையிலான சிபிஐ அதிகாரிகள் கடந்த 16ம் தேதி இரவு கரூர் வந்தனர். அவர்கள் கரூர் பொதுப்பணித் துறை சுற்றுலா மாளிகையில் தங்கி, விசாரணையை தொடங்கினர். இதனிடையே, இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமிழக அரசு சார்பில் தலா ரூ.10 லட்சம் நிவாரணம் வழங்கப்பட்டது. மேலும், காங்கிரஸ் சார்பில் தலா ரூ.2.50 லட்சம், மநீம சார்பில் தலா ரூ.1 லட்சம், விசிக சார்பில் ரூ.50 ஆயிரம் என பல்வேறு கட்சிகள் சார்பில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. இதேபோல, தவெக சார்பில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.20 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை தவெக தலைவர் விஜய் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, நிவாரண உதவியை வழங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது. இதற்காக, கரூரில் உள்ள ஒரு திருமண மண்டபத்துக்கு பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை வரவழைத்து, அங்கு அவர்களுக்கு விஜய் நிவாரண உதவிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், இடம் தேர்வு செய்வதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக விஜய் வருகை தள்ளிப்போவதாக கூறப்பட்டது.

இந்நிலையில், கரூர் மாவட்டத்தில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 31 பேர் உயிரிழந்த நிலையில், 27 பேரின் வங்கிக் கணக்குகளிலும் நேற்று தவெக சார்பில் தலா ரூ.20 லட்சம் வரவு வைக்கப்பட்டது. அதற்கான குறுஞ்செய்தி அவர்களது செல்போனுக்கு வந்தது. இதேபோல, இங்கு உயிரிழந்த மேலும் 10 பேரின் குடும்பத்தினருக்கும் தவெக சார்பில் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்திருந்தாலும், அந்தக் குடும்பத்துக்கு ரூ.20 லட்சம் மட்டும் நிவாரணம் வழங்கப்பட்டதாகவும் தவெக தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக கரூரில் தனது 2 மகள்களை பறிகொடுத்த செல்வராணி கூறும்போது, "தவெகவினர் வங்கிக் கணக்குவிவரங்களை வாங்கியிருந்த நிலையில் வங்கிக் கணக்கில் ரூ.20 லட்சம் வரவு வைக்கப்பட்டதற்கான எஸ்எம்எஸ் வந்தது" என்றார்.

அனுமதி கிடைத்ததும் சந்திப்பேன்: தவெக தலைவர் விஜய் நேற்று விடுத்த அறிக்கையில் கூறியிருப்பதாவது: கரூரில் ஏற்பட்ட தாங்க முடியாத வேதனை நிகழ்வில் நம் குடும்ப உறவுகளை இழந்து தவிக்கிறோம். இந்த சூழலில் அவர்களுக்கு ஆறுதலாகவும், ஆதரவாகவும் இருப்போம் என்பதை மீண்டும் உறுதியாக தெரிவித்துக் கொள்கிறோம்.கடந்த வாரம் காணொலி அழைப்பில் சொன்னதுபோல, நேரடி சந்திப்புக்கான சட்டரீதியான அனுமதி முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறோம். அனுமதி கிடைத்ததும் நிச்சயமாக சந்திப்போம். இதற்கிடையே, ஏற்கெனவே அறிவித்தபடி குடும்ப நல நிதியாக ரூ.20 லட்சத்தை வங்கி வாயிலாக அனுப்பி வைத்துள்ளோம். அதை நமது உதவிக்கரமாக பாதிக்கப்பட்டவர்கள் ஏற்க வேண்டும். இறைவன் அருளுடன் இந்த கடினமான தருணத்தை கடந்து வருவோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கரூர் மண்டலத்தில் புதிய 5 தாழ்தள நகரப் பேருந்துகள் சேவை: செந்தில்பாலாஜி தொடங்கி வைத்தார்



கரூர், அக்.20-

புதிய 5 தாழ்தள நகரப் பேருந்துகள் சேவையை முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி எம்எல்ஏ தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கரூர் மண்டலம் சார்பில் புதிய 5 தாழ்தள நகரப் பேருந்துகள் சேவை தொடக்க விழா இன்று (அக்.19ம் தேதி) கரூர் திருமாநிலையூர் புதிய பேருந்து நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார். முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி கொடியசைத்து பேருந்துகள் சேவை தொடங்கி வைத்தார். கரூர் மாநகராட்சி துணை மேயர் ப.சரவணன், மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்எஸ்.ராஜா, சக்திவேல், மாநகராட்சி ஆணையர் கே.எம்.சுதா, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக கரூர் மண்டல துணை மேலாளர் சாமிநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இவற்றில் கரூர் குளித்தலை, கரூர் பாளையம் வழித்தடங்களில் தலா 2 பேருந்துகள், கரூர் வேலூர் வழித்தடத்தில் 1 பேருந்தும் இயக்கப்படுகிறது. செய்தியாளர்களிடம் செந்தில்பாலாஜி கூறியது: இந்த புதிய பேருந்துகள் மாற்றுத் திறனாளிகள் எளிதில் பயணிக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

புதிய பேருந்து நிலையம் பயன்பாட்டிற்கு வந்தபின் எந்த இடங்களிலும் போக்குவரத்து நெரிசல் இல்லை. கரூர் மக்கள் வியந்து பார்க்கக்கூடிய அளவுக்கு மிக பிரம்மாண்டமாக, எல்லா வசதிகளும் கூடிய சிறப்பம்சங்களுடன் புதிய பேருந்து நிலையம் வடிவமைக்கப்பட்டுள்ளது இன்னும் கூடுதல் தேவைகள் இருந்தாலும் அதை செய்வதற்கு முதல்வர் தயாராக இருக்கின்றார்கள்.

புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பழைய பேருந்து நிலையத்திலிருந்து 24 மணி நேர நகரப் பேருந்துக்கள் சேவை உள்ளன. சேலம், ஈரோடு, கோவை, தாராபுரம், பொள்ளாச்சி செல்லக்கூடிய பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு கரூர் பழைய பேருந்து நிலையத்துக்கு சென்று அங்கிருந்து செல்லக்கூடிய இடங்களுக்கு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதல்வர் திட்டங்களை அறிவித்து, அதற்கான நிதிகளைக் கொடுத்து, நாம் செயல்படுத்த நினைக்கின்ற பொழுது சிலர் மக்கள் மீதுஅக்கறை இல்லாதவர்கள், மக்களுக்கு எதிராகச் செயல்படக் கூடியவர்கள், மக்களுக்கு எந்த நன்மையும் கரூர் மாவட்டத்தில் கிடைத்து விடக்கூடாது என்று குறுகிய மனப்பான்மையோடு இருக்கக்கூடியவர்கள், அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த பொழுதும் மக்களுக்கு எதையும் செய்யாதவர்கள், இப்பொழுது இந்தத்திட்டங்கள் நடந்துவிடக்கூடாது என்பதற்காக தொடர்ந்து ஒவ்வொரு திட்டங்களையும் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெறுகின்றனர். அதன்பின் போராடி வெற்றிபெற்று தான் திட்டங்கள் கொண்டு வரப்படுகிறது.

திருவள்ளுவர் மைதானத்தில் ரூ.7 கோடியில் மாவட்ட மைய நூலகம் கட்டவும் தடையாணை பெற்றன்ர. அதன் பின் நீதிமன்றம் சென்று வெற்றி பெற்று கட்டப் படுகிறது. இப்படி ஒவ்வொரு பணிகளாக கரூரில் முன்னெடுக்கக்கூடிய பணிகள் அனைத்துமே நீதிமன்றம் சென்று வெற்றிபெற்று பணிகளைத் தொடங்கக்கூடிய சூழல் இருக்கின்றன. வரக்கூடிய ஆண்டுகளில் பொதுமக்களுக்கு இன்னும் சிறப்புத் திட்டங்கள் சிறப்பாக நடைபெற இருக்கின்றன என்றார்.



# மேட்டுப்பாளையம் குன்னூர் ரயில் பாதையில் மண்சரிவு: மலை ரயில் ரத்து

குன்னூர், அக்.20-

மேட்டுப்பாளையம் குன்னூர் ரயில்பாதையில் பல இடங்களில் மண் சரிவு மற்றும் பாறைகள் விழுந்ததால் மலை ரயில் சேவை இன்று ரத்து செய்யப்பட்டது.

நீலகிரி மாவட்டம் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதனால், பகல் மற்றும் இரவு நேரங்களில் பலத்த மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், தொடர் மழையின் காரணமாக 7 இடங்களில் மரங்கள் விழுந்தால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. குன்னூர் கட்டப்பெட்டு சாலை மற்றும் சோலூர்மட்டம் சாலையில் மண் சரிவு ஏற்பட்டு போக்குவரத்து தடைப்பட்டது.

நெடுஞ்சாலைத்துறையினர் ஜே.சி.பி உதவியுடன் மண் சரிவை அகற்றி போக்குவரத்தை சீரமைத்தனர். குன்னூர் அம்பிகாபுரத்தில் கார் மீது மரம் விழுந்ததில் கார் சேதமடைந்தது.

மலை ரயில் ரத்து: இந்நிலையில், மேட்டுப்பாளையம் குன்னூர் மலை ரயில் பாதையில் பல இடங்களில் மண் சரிவு ஏற்பட்டது. மேலும், ரயில் தண்டவாளத்தில் பாறைகள் விழுந்தன. இதனால், இன்று மேட்டுப்பாளையம் குன்னூர் மற்றும் குன்னூர் ஊட்டி இடையே மலை ரயில் சேவை ரத்து செய்யப்பட்டது.

ரயில்வே ஊழியர்கள் ரயில் பாதையை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மாவட்டத்தில் இன்று காலை நிலவரப்படி கோத்தகிரி 137, கீழ் கோத்தகிரி 102, பர்லியார் 92, பந்தலூர் 92, கோடநாடு 88, கெத்தை 76, எடப்பள்ளி 72 மி.மீ., மழை பதிவானது.



# பொள்ளாச்சியில் கனமழை: வெள்ளத்தில் சிக்கிய கோயில் காவலாளிகளை மீட்ட தீயணைப்பு வீரர்கள்

பொள்ளாச்சி, அக்.20-

ஆனைமலை அடுத்த பாலாற்றங்கரையில் அமைந்துள்ள ஆஞ்சநேயர் கோயிலை இன்று காட்டாற்று வெள்ளம் சூழ்ந்தது. வெள்ளத்தில் சிக்கிய காவலாளிகள் இருவரை தீயணைப்புத் துறையினர் நீண்ட நேர போராட்டத்திற்கு பிறகு மீட்டனர்.

ஆனைமலை அடுத்த பாலாற்றின் மையப்பகுதியில் உள்ள ஆஞ்சநேயர் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற கோயில் என்பதால் இங்கு சனிக்கிழமை மற்றும் அனைத்து தினங்களிலும் ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். இக்கோயிலுக்கு இரவு நேரத்தில் இரண்டு காவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று மாலை முதல் ஆனைமலை சுற்றுவட்டார பகுதிகளில் கன மழை கொட்டி தீர்த்தது. இதனால் சிற்றோடைகள் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இன்று அதிகாலை பாலாற்றிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஆஞ்சநேயர் கோயிலை வெள்ளம் சூழ்ந்தது.

கோயிலில் இரவு காவலர்களாக பணியாற்றி வரும் மகாலிங்கம் (60) ஜெயக்குமார் (58) ஆகியோர் வெள்ளத்தில் சிக்கி கொண்டனர். சுதாரித்துக் கொண்ட இரவு காவலர்கள் உடனடியாக பொள்ளாச்சி தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் கொடுத்துள்ளனர். தகவலின் பேரில் விரைந்து வந்து தீயணைப்பு துறை வீரர்கள், நீண்ட நேரம் போராட்டத்துக்குப் பிறகு இருவரையும் கயிறு கட்டி கரைக்கு அழைத்து வந்தனர் இதனால் இப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

மேலும், கோயில் ஆற்றின் மையப் பகுதியில் இருப்பதால் இதுபோன்று சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வருகிறது. இதனை தடுக்கும் விதமாக தமிழக அரசு இந்து சமய அறநிலை துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த கோயிலுக்கு புதியதாக மேம்பாலம் கட்டித் தர வேண்டும் என இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சென்னை, புறநகரில் கொட்டும் மழையிலும் களைகட்டிய தீபாவளி விற்பனை





**சென்னை, அக்.20–**

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று தீபாவளி புத்தாடைகள் விற்பனை களைக ட்டியது. கொட்டும் மழையிலும் தியாகராய நகர், புரசைவாக்கம், வண்ணாரப்பேட்டை, குரோம் பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள துணிக் கடைகளில் மக்கள் கூட்டம் அலை மோதியது. இன்றைய தினம் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படவுள்ள நிலையில், கடந்த ஒரு வாரம ாகவே கடைவீதிகளில் படிப்படியாக வியாபாரம் சூடுபிடித்து வருகிறது. குறிப்பாக தீபாவளிக்கு ஒரு நாளே இருக்கும் நிலையில் நேற்றும் குழந்தைகள், பெற்றோர், உறவினர்களுக்கு புத்தடைகளை வாங்க பொதுமக்கள் ஏராளமானோர் திரண்டனர். இதனால் சென்னை, புறநகர் பகுதிகளில் உள்ள துணிக்கடைகளில் நேற்று காலை முதலே பொதுமக்கள் கூட்டம் அலை மோதியது. குறிப்பாக தியாகராய நகர், ரங்கநாதன் தெரு முழுவதும் மனித தலைகளாக காணப்பட்டன.

பாதுகாப்பு பணியில் சுமார் 1,000 போலீஸார் ஈடுபடுத் தப்பட்டனர். அவர்கள் உயர் கோபுரங்களை அமைத்து கண்காணித்ததுடன் ஒலி பெருக்கியில் தங்களின் உடமைகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுமாறு பொது மக்களை எச்சரித்த வண்ணம் இருந்தனர். சாதரண உடையிலும் மக்கள் கூட்டத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டனர். தியாகராய நகர் பகுதியில் ரங்கநாதன் தெரு, உஸ்மான் சாலை, பாண்டி பஜார் போன்ற இடங்களில் மக்கள் கூட்டம் அதிமாக இருந்தது. அப்பகுதிகளில் உள்ள துணிக் கடைகளில் காலை முதலே உள்ளே நுழைய முடியாத அளவுக்கு மக்கள் கூட்டம் அலை மோதியது. துணிக் கடைகளுக்கு இணையாக சாலையோர கடைகளிலும் துணிகள் மற்றும் அணிகலன்கள் விற்பனை அனல் பறந்தது. சென்னை, புறநகர் பகுதிகளில் காலை முதலே தொடர்ச்சியாக மழை பெய்து வந்த நிலையிலும், துணிக் கடைகளுக்கு வந்த மக்கள் ரம்மியமான குளிர்ந்த சூழலை ரசித்தபடி பொருட்களை வாங்கினர்.

புத்தாடைகளை வாங்கிய பின் அனைவரும் அசைவ உணவகங்களை நோக்கிச் சென்றதால், உணவகங்களிலும் இனிப்பகங்களிலும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தன. நீண்ட நேரம் காத்திருந்தே உணவருந்தும் நிலை ஏற்பட்டது. இதேபோன்று புரசைவாக்கம் நெடுஞ்சாலை, பழைய வண்ணாரப்பேட்டை எம்சி சாலை, புறநகர் பகுதிகளான தாம்பரம், குரோம்பேட்டை, பள்ளிக்கரணை, பூந்தமல்லி கடை வீதிகளில் நேற்று மக்கள் கூட்டம் அலை மோதியது. புறநகரை பொறுத்த வரை முக்கிய வணிக பகுதிகளான குரோம் பேட்டை, தாம்பரம், மேட வாக்கம், பல்லாவரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நேற்று காலை முதலே மக்கள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. இதனால், ஒரு தெருவை கடக்கவே சில மணி நேரம் ஆனது. அதேபோல சாலையோர கடைகளில் அலங்கார பொருட்கள், பாசி மாலைகள், அணிகலன்கள் போன்றவற்றை வாங்க மக்கள் அதிகம் ஆர்வம் காட்டினர். இதனால், இந்த கடைகளிலும் கூட்டம் காணப்பட்டது. புறநகரின் பல்வேறு இடங்களில் இருந்து ஒரேநேரத்தில் ஏகப்பட்ட வாகனங்கள் நுழைந்ததால் சென்னை மார்க்கமான ஜிஎஸ்டி, சாலையில் கடும் நெரிசல் ஏற்பட்டது. பெருங்களத்தூர் முதல் பல்லாவரம் வரை வாகனங்கள் ஊர்ந்து ஊர்ந்து சென்றன. இதனால், வாகன ஓட்டிகள் பெரும் சிரமத்துக்கு ஆளாகினர். ஆங்காங்கே பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீஸார், போக்குவரத்து நெரிசலை ஒழுங்குப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.



# குன்னூரில் கனமழையால் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்து பாதிப்பு

குன்னூர், அக்.20–

குன்னூரில் தொடரும் கன மழையால், வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்து பொதுமக்கள் அவதிப்பட்டனர்.

நீலகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினமும், நேற்றும் பல்வேறு பகுதிகளில் அவ்வப்போது மழை பெய்தது. சாலைகள் மற்றும் பல்வேறு இடங்களில் மரங்கள் விழுந்து பாதிப்பு தொடர்கிறது. குன்னூர் எடப்பள்ளி பகுதியில் 11 செ.மீ மழை பதிவானது.

உழவர் சந்தை அருகே உள்ள, மாடல் ஹவுஸ் பகுதியில் 3வது முறையாக குடியிருப்புக்குள் தண்ணீர் புகுந்ததால் அப்பகுதி மக்கள் அவதி அடைந்தனர். இதுகுறித்து நகராட்சி அதிகாரிகளிடம் தகவல் அளித்தனர். ஆனால் நகராட்சி அதிகாரிகள் அங்கு வந்து அடைப்புகளை மட்டும் தற்காலிகமாக சீரமைத்து செல்கின்றனர். எனவே அங்கு மறைக்கப்பட்டு கழிவு நீர் கால்வாய்கள் மற்றும் பாதாள சாக்கடைகளை மறைத்து கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதாகவும் எனவே இதனை சீரமைத்து தந்தால் மட்டுமே நிரந்தர தீர்வு கிடைக்கும் என்றும் குடியிருப்பு வாசிகள் புகார் தெரிவித்துள்ளனர்.


உழவர் சந்தை செல்லும் சாலையில் சிறு பாலத்தில் அடைப்பு ஏற்பட்டு இருந்தது. இதனால் தண்ணீர் அதிகமாக வெளியேறி குடியிருப்பு பகுதிக்கு செல்வதால் கால்வாயை சீர் செய்யாமல் பொதுமக்கள் செல்லக்கூடிய பிரதான சாலையை பொக்லைன் இயந்திரம் மூலம் உடைத்தனர். இதனால், அந்தப் பகுதிக்கும், உழவர் சந்தைக்கும் மக்கள் யாரும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. மேலும் இந்த சாலை புதிதாக சமீபத்தில் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அட்டடி டால்பின் நோஸ், கரும்பாலம், கிளண்டேல் உள்பட 4 பகுதிகளில் சாலைகளில் மரங்கள் விழுந்ததால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. குன்னூர் தீயணைப்பு நிலைய அலுவலர் குமார் தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று மரங்களை வெட்டி அகற்றினர்.

இதேபோல் குன்னூர் கட்டப்பெட்டு சாலையில் வண்டிச்சோலை, கோடநாடு ஆகிய பகுதிகளில் சாறைகளில் பாறைகள் விழுந்தன. நெடுஞ் சாலைத்துறை கோட்ட பொறியாளர் குழந்தைராஜ் உத்தரவின் பேரில் உதவி செயற்பொறியாளர் ஜெயபிரகாஷ் தலைமையிலான குழுவினர் பாறைகளை அகற்றினர்.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் மில்லி மீட்டர் அளவில் வருமாறு: ஊட்டி 123, எடப்பள்ளி 113, பந்தலூர் 74,, கெத்தை 56, கோடநாடு 56, கோத்தகிரி 52, குந்தா 49, குந்தா 49, கிண்ணக்கொரை 41, பாலகொலா 39, கூடலூர் 6 மி.மீ., மழை பதிவானது.

# கோயில்கள், மடங்களின் நிதி, சொத்துகள் தொடர்பான அறநிலையத் துறை உத்தரவு, அரசாணைகளை இணையத்தில் உடனுக்குடன் வெளியிட வழக்கு



சென்னை, அக்.20–

கோயில்கள், மடங்களின் நிதி, சொத்துகள் தொடர்பான அரசாணைகள், டெண்டர் அறிவிக்கைகள், அனுமதி உத்தரவுகள் ஆகியவற்றை அறநிலையத் துறை இணையதளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யக்கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இது குறித்து தமிழக அரசு, அறநிலையத் துறை பதில் அளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக ஆலய வழிபடுவோர் சங்கத் தலைவர் மயிலாப்பூர் டி.ஆர். ரமேஷ், தாக்கல் செய்த மனு: தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி அரசுத் துறைகளின் அரசாணைகள், டெண்டர் அறிவிக்கைகள், அனுமதி உத்தரவுகளை அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் அரசு இணையதளங்களில் வெளிப்படையாக கட்டாயம் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஆனால், இந்து சமய அறநிலையத் துறையின் இணையதளத்தில் கடந்த 2022ம் ஆண்டுக்குப் பிறகு எந்தவொரு தகவலும் புதிதாக பதிவேற்றம் செய்யப்படவில்லை.

அறநிலையத் துறை நிர்வாகத்தின் அன்றாட செயல்பாடுகள், துறை ஆணையர் வசம் உள்ள பொதுநல நிதி குறித்து எந்த தகவலும் வெளிப்படையாக தெரிவிப்பதில்லை. எனவே, கோயில்கள், மடங்கள், இந்து மத கட்டளைகளின் நிதி, சொத்துகள் தொடர்பான அறநிலையத் துறையின் அர சாணைகள், டெண்டர் அறிவிக்கைகள், அனுமதிக்கான உத்தரவுகளை பொதுவெளியில் அனைவரும் உடனே அறிந்து கொள்ளும் வகையில், அறநிலையத் துறையின் இணையதளத்தில் கட்டாயம் பதிவேற்றம் செய்யுமாறு உத்தரவிட வேண்டும். அதுவரை, டெண்டர் உள்ளிட்ட எந்த பணிகளையும் இறுதி செய்ய தடை விதிக்க வேண்டும். இவ்வாறு கோரியிருந்தார்.நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன்பு இந்த மனு மீதான விசாரணை நடந்தது. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் பி.ஜெகந்நாதன், அறநிலையத் துறை தரப்பில் வழக்கறிஞர் எஸ்.ரவிச்சந்திரன், மாநில தகவல் ஆணையம் தரப்பில் வழக்கறிஞர் விக்னேஸ்வரன் ஆஜராகி வாதிட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி இதுதொடர்பாக தமிழக அரசும் அறநிலையத் துறையும் பதில் அளிக்க உத்தரவிட்டு, விசாரணையை அக்.29க்கு தள்ளிவைத்தார்.

# ராஜபாளையத்தில் கனமழை: அரிசி ஆலை சுவர் இடிந்து 50+ ஆடுகள் உயிரிழப்பு

ராஜபாளையம், அக்.20–

ராஜபாளையம் பகுதியில் இன்று அதிகாலை பெய்த கனமழையில் தனியார் அரிசி ஆலை சுற்றுச்சுவர் இடிந்து விழுந்ததில் தொழுவத்தில் அடைத்து வைத்திருந்த 50க்கும் மேற்பட்ட ஆடுகள் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தன.



ராஜபாளையம் அருகே இளந்திரைகொண்டான் ஊராட்சிக்கு உட்பட்ட அம்மையப்பபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் முருகன். ஆடு மேய்க்கும் தொழில் செய்து வருகிறார். முருகன் அதே பகுதியில் தொழுவம் அமைத்து 100க்கும் மேற்பட்ட ஆடுகள் வளர்த்து வருகிறார். வெள்ளிக்கிழமை மாலை மேய்ச்சல் முடிந்து ஆடுகளை தொழுவத்தில் அடைத்து விட்டு வீட்டுக்குச் சென்றார்.

ராஜபாளையம் பகுதியில் நேற்று இரவு பெய்த கனமழை காரணமாக அதிகாலை 3 மணி அளவில் தொழுவத்தின் அருகே உள்ள தனியார் அரிசி ஆலையின் 25 அடி உயரமுள்ள சுற்றுச் சுவர் இடிந்து தொழுவத்தின் மீது விழுந்தது. இதில் இடிபாடுகளில் சிக்கி 50க்கும் மேற்பட்ட ஆடுகள் இறந்தன. இதுகுறித்து தளவாய்புரம் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவ இடத்தில் டி.எஸ்.பி பஸினா பீவி, வட்டா ட்சியர் ராஜீவ் காந்தி ஆகியோர் ஆய்வு செய்தனர். தனியார் அரிசி ஆலையை சுற்றிலும் தரையில் இருந்து 10 அடி உயரத்திற்கு மண் நிரப்பி, அதன்மேல் 15 அடி உயரத்துக்கு சுற்றுச் சுவர் எழுப்பியதால் மண் சரிந்து சுற்றுச்சுவர் இடிந்து விழுந்துள்ளது. இதனால் அரிசி ஆலையை சுற்றிலும் கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவரை இடிக்க வருவாய்த் துறையினர் உத்தரவிட்டனர்.

# தீபாவளி பண்டிகை களைகட்டியது: 3 நாட்களில் 14 லட்சம் பேர் பயணம்

சென்னை, அக்.20–

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சென்னையில் இருந்து கடந்த 3 நாட்களில் 14 லட்சத்துக்கும் மேற்பட்டோர் சொந்த ஊர்ளுக்கு புறப்பட்டுச் சென்றனர். இதனால், பேருந்து, ரயில் நிலையங்களில் கூட்டம் அலைமோதியது. சாலைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.



தீபாவளியை முன்னிட்டு சென்னை, பெங்களூரு போன்ற பெருநகரங்களில் வசிப்போர் சொந்த ஊர்களுக்குச் செல்வதற்காக கடந்த 16ம் தேதி முதல் தமிழக போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. நேற்று முன்தினம் வரை சுமார் 3.50 லட்சம் பேர் சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்கு அரசு பேருந்துகள் மூலமாகப் பயணித்தனர்.

தீபாவளிக்கு ஒருநாள் மட்டுமே உள்ள நிலையில், நேற்று பெரும்பாலான தனியார் நிறுவன ஊழியர்கள் உள்ளிட்டோர் சொந்த ஊர்களுக்குப் புறப்பட்டனர். ஆங்காங்கே சாரல் மழை பெய்தது. அதையும் பொருட்படுத்தாமல், புத்தாடை, இனிப்பு வாங்க கடைவீதிகளில் மக்கள் குவிந்ததால், சென்னையின் முக்கிய சாலைகள் பரபரப்பாக காணப்பட்டன.

இதேபோல, கோவை, திருப்பூர், திருச்சி, சேலம் உள்ளிட்ட நகரங்களில் இருந்தும் ஏராளமானோர் சொந்த ஊர்களுக்கு புறப்பட்டுச் சென்றனர். பயணிகள் சிரமமின்றி பயணிக்க வசதியாக தமிழகம் முழுவதும் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் தொடர்ச்சியாக சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன. வழக்கமான ரயில்கள் தவிர, சிறப்பு ரயில்களும் இயக்கப்பட்டன. அனைத்து வாகனங்களிலும் கூட்டம் அதிக அளவில் காணப்பட்டது.

சென்னையில் கிளாம்பாக்கம், கோயம்பேடு, மாதவரம் உள்ளிட்ட பேருந்து நிலையங்களில் இருந்து வெளியூர்களுக்கு சிறப்பு பேருந்துகள் தொடர்ந்து இயக்கப்பட்டன. கடும் போக்குவரத்து நெரிசல் காரணமாக கிளாம்பாக்கத்துக்கு சிறப்புப் பேருந்துகள் வருவதில் தாமதம் நிலவியது. இதனால் பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்து பயணம் செய்தனர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீஸார் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். காத்திருக்கும் பயணிகளின் களைப்பை போக்க கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பேருந்துகள் சுங்கச்சாவடிகளில் நெரிசலில் சிக்காமல் தனி வழித்தடம் வழியாக பயணிக்க போக்குவரத்து ஆணையரகம் நடவடிக்கை எடுத்திருந்தது.

ஆம்னி பேருந்துகளிலும் கூட்டம் அதிகம் காணப்பட்டது. ஆம்னி பேருந்துகளை முடிந்தவரை கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்துக்குள் கொண்டுவர வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டது. ஆம்னி பேருந்து கூடுதல் கட்டண புகார்கள் தொடர்பாக குழுக்கள் அமைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேபோல, தெற்கு ரயில்வே சார்பில் 20க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டன. வெளிமாநிலத்தைச் சேர்ந்தவ ர்கள், தென் தமிழக த்துக்கு பயணிப்போர் என லட்சக்கணக்கானோர் சென்ட்ரல், எழும்பூர், தாம்பரம் ரயில் நிலையங்களில் திரண்டனர். முன்பதிவு இல்லாத பொதுப் பெட்டிகளில் ஏறுவதற்காக பயணிகள் நீண்ட வரிசையில் காத்திருந்து இடம்பிடித்தனர். கூட்டத்தை ஒழுங்குப டுத்துவது மற்றும் பாதுகாப்பு பணியில் ஆர்பிஎஃப் போலீஸார் ஏராளமானோர் ஈடுபட்டிருந்தனர்.

தாம்பரத்தில் இருந்து கன்னியாகுமரி, ராமேசுவரம், திருநெல்வேலிக்கு சென்ற விரைவு ரயில்களில் வழக்கத்தைவிட கூட்டம் அதிகம் இருந்தது. முன்பதிவு இல்லாத பெட்டிகளில் கட்டுக்கடங்காத கூட்டம் காணப்பட்டது. பொருட்கள், துணிமணிகள் வாங்க மக்கள் திரண்டதால் மின்சார ரயில்கள், மெட்ரோ ரயில்களிலும் கூட்டம் அலைமோதியது.

இவ்வாறு கடந்த 3 நாட்களில் அரசுப் பேருந்து, ரயில்கள், ஆம்னி பேருந்துகளில் 14 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயணித்துள்ளனர். தமிழகம் முழுவதும் இன்றும் சிறப்பு பேருந்துகள், ரயில்கள் இயக்கப்படுகின்றன.




# “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பயிற்சிக் கூட்டம்: முதல்வர் தலைமையில் 28ம் தேதி நடக்கிறது

சென்னை, அக்.20–

மாமல்லபுரத்தில், தேர்தலை முன்னிட்டு திமுக நிர்வாகிகளுக்கு ‘ என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ என்ற பயிற்சிக் கூட்டம் வரும் அக்.28ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது. இதுகுறித்து பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது: திமுக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டமிடலின்படி வரும் சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை திமுக மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் மத்திய பாஜக அரசின் முன்பு “தமிழ்நாடு தலைகுனியாது” என்ற பரப்புரையை கழகம் தொடங்கவுள்ளது. அதன் ஒருபகுதியாக ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் திமுகவின் வெற்றியை உறுதி செய்யும் வகையில், முதல்வர் ஸ்டாலின் தலைமையில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” என்ற முன்னெடுப்புக்காக ”திமுக மாவட்ட செயலாளர்கள் மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள் சட்டப்பேரவை உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக செயலாளர்களுக்கான பயிற்சிக் கூட்டம்” வரும் அக்.28ம் தேதி செவ்வாய்கிழமை, காலை 9 மணிக்கு மாமல்லபுரம், ஈ.சி.ஆர்.சாலையில் உள்ள “கான்ஃப்ளுயன்ஸ் ஹாலில்” நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர்கள், மாநிலங்களவை, மக்களவை உறுப்பினர்கள், எம்எல்ஏக்கள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.



# ஏழுமலையான் பக்தர்களிடம் இடைத்தரகர் ரூ.4 லட்சம் மோசடி

திருமலை, அக்.20–

தெலங்கானாவை சேர்ந்த சில பக்தர்கள் தங்களுக்கு திருப்பதி எழுமலையான் கோயில் ஆர்ஜித சேவைகளும், திருமலையில் தங்க சொகுசு பங்களாவும் ஏற்பாடு செய்து தர வேண்டும் என இடைத்தரகர் ஒருவரை அணுகியுள்ளனர். அவர், இதற்கு ரூ.4 லட்சம் செலவாகும் என கூறியுள்ளார். இதையடுத்து மொத்த தொகையையும் தெலங்கானா பக்தர்கள் செல்போன் மூலம் அனுப்பி உள்ளனர். ஆனால் பணத்தை பெற்றுக் கொண்ட பிறகு அந்த இடைத்தரகர் தனது செல்போனை ஸ்விட்ச் ஆஃப் செய்து விட்டார். இதையடுத்து தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அந்த பக்தர்கள் திருமலை 2வது காவல் நிலையத்தில் நேற்று புகார் அளித்தனர்.

இதன் மீது வழக்குப் பதிவு செய்த போலீஸார், தலைமறைவான இடைத்தரகரை தேடி வருகின்றனர். இது போன்ற இடைத்தரகர்களை நம்பி ஏமாற வேண்டாம் என பக்தர்களுக்கு திருமலை போலீஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# அதிக செயற்கைகோள்கள் அனுப்பப்பட்டதால் வானிலை தகவல்

நெல்லை அக்.20–

அதிக செயற்கைகோள்களை அனுப்பி உள்ளதால், வானிலை குறித்த தகவல்களை மிகத் துல்லியமாக, முன்கூட்டியே பெற முடிகிறது என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன (இஸ்ரோ) தலைவர் நாராயணன் கூறினார்.

திருநெல்வேலி மாவட்டம் வடக்கன்குளத்தில் உள்ள தனியார் கல்லூரி நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்திய வானிலை ஆராய்ச்சிக்கு அதிக அளவிலான செயற்கைகோள்களை அனுப்பி இருக்கிறோம். இதனால், வானிலை குறித்த தகவல்களை மிகத் துல்லியமாக, முன்கூட்டியே பெற முடிகிறது. மீனவர்கள் கடலில் எல்லையை கடக்காமல் இருக்கவும், மீன்கள் அதிகமாக உள்ள பகுதிகளை அறியவும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட இணைய செயலிகளை உருவாக்கி கொடுத்துள்ளோம். அதன் மூலமாக தமிழிலேயே தகவல்களைப் பெற முடியும்.ககன்யான் திட்டத்துக்காக 80 ஆயிரம் சோதனைகள் நடைபெற்றுள்ளன. இத்திட்டத்தில் முதலில் 3 ஆளில்லா ராக்கெட்களை விண்ணுக்கு அனுப்பி சோதனை செய்த பின்பே, ஆட்களை விண்ணுக்கு அனுப்புவோம். அதற்கான முதல் ராக்கெட் இந்த ஆண்டு இறுதியில் விண்ணுக்கு செலுத்தப்படும். அடுத்த ஆண்டு 2 ராக்கெட்டுகள் ஏவப்படும். விண்வெளியில் இருக்கும் நபர்களுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால், அதிலிருந்து தப்பிக்க ‘க்ரூ எஸ்கேப் சிஸ்டம்’ என்ற பாதுகாப்பு அமைப்பை வெற்றிகரமாக சோதித்துள்ளோம்.

உலக அளவில் விண்வெளிக்கு ராக்கெட்களை வணிகப் பயன்பாட்டுக்கு பயன்படுத்துவதில் இந்தியா 2 சதவீத பங்களிப்பை கொண்டுள்ளது. இதை 10 சதவீதமாக உயர்த்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். தற்போது, 10 ஆயிரம் கிலோ எடை கொண்ட செயற்கை கோள்களை எடுத்து செல்லும் ராக்கெட்களை வெற்றிகரமாக அனுப்பி உள்ளோம். 40 ஆயிரம் கிலோ எடை கொண்ட செயற்கைக் கோளை அனுப்புவதற்கு தேவையான ராக்கெட்டுகளை தயாரிக்க அனுமதி கிடைத்துள்ளது. அந்தப் பணியும் நடைபெறுகிறது. ககன்யான் திட்டத்துக்கு, 80 ஆயிரம் கிலோ செயற்கை கொளை சுமந்து செல்லும் ராக்கெட் தயாரிக்க வேண்டும். அதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு நாராயணன் கூறினார்.

# பிரதமர் மோடியின் தீபாவளிப் பரிசு மக்களை முழுமையாகச் சென்றடைந்துள்ளது: மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பெருமிதம்

புதுடெல்லி, அக்.20–

ஜிஎஸ்டி சீர்திருத்தம் குறித்து டெல்லியில் நேற்று மத்திய நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தனர்.

மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பேசும்போது “ஜிஎஸ்டி குறைப்பால் உணவு பணவீக்கம் கணிசமாக குறைந்துள்ளது. ஜி.எஸ்.டி. சீர்திருத்தம் மூலம் எலக்ட்ரானிக் பொருள் விற்பனை சாதனை படைத்துள்ளது” என்றார்.

பின்னர் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசியதாவது: ஜிஎஸ்டி குறைப்பால் நுகர்வோருக்கு பலன் கிடைத்துள்ளது. கார், ஏசி, வாஷிங் மெஷின், டி.வி. உள்ளிட்ட பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளது. பண்டிகை காலத்தில் பைக்குகள், டிராக்டர்கள் விற்பனை வேகமாக உயர்ந்துள்ளது.

அதேபோல் கார்கள் விற்பனை மிகவும் அதிகரித்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடி அறிவித்த தீபாவளி பரிசு மக்களை முழுமையாக சென்றடைந்துள்ளது. உள்நாட்டு பொருட்களுக்கு மக்கள் முன்னுரிமை அளித்துள்ளனர். தற்சார்பு இந்தியாவின் வளர்ச்சிக்கு புதிய உற்சாகம் ஏற்பட்டுள்ளது.

மக்கள் தினசரி பயன்படுத்தும் 54 பொருட்களை மத்திய அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வந்தது. அவற்றில் ஒவ்வொன்றிலும், ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் ஏற்படும் வரிச்சலுகை நுகர்வோருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்தோம். பிரதமரின் தீபாவளி பரிசு அறிவிப்பின் நோக்கம் நிறைவேறியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் கூறும்போது, “நவராத்திரியின் முதல் நாளன்று கொண்டு வரப்பட்ட ஜிஎஸ்டி சீர்திருத்தம் வரவேற்பை பெற்று இருக்கிறது. அனைத்து தரப்பினரும் பயன் அடைந்து வருகின்றனர். வியாபாரம் அதிகரித்துள்ள அதே நேரத்தில் சேமிப்பும் பல மடங்கு உயர்ந்துள்ளது” என்றார்.

# நேரடி நெல் கொள்முதலில் திமுக நாடகம்; விவசாயிகளுக்கு இது கண்ணீர் தீபாவளி: இபிஎஸ்

சென்னை, அக்.20-

நேரடி நெல் கொள்முதலில் மீண்டும் மீண்டும் நாடகமாடும் ஸ்டாலின் மாடல் திமுக ஆட்சியில், திமுக அரசின் மோசமான நிர்வாகத்தினால், நம் தமிழக விவசாயிகளுக்கு இது கண்ணீர் தீபாவளியாக மாறியிருக்கிறது என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'அதர்மத்தை அழித்து தர்மத்தின் வெற்றியைக் குறிக்கும் தீபாவளி பண்டிகையை இந்தியா முழுவதும் உள்ள மக்கள் உற்சாகத்துடன் கொண்டாடி வருகிறார்கள். ஆனால், இந்த திமுக அரசின் மோசமான நிர்வாகத்தினால், நம் தமிழக விவசாயிகளுக்கு கண்ணீர் தீபாவளியாக மாறியிருக்கிறது.

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, விவசாயிகள் பார்த்துப் பார்த்து விளைவித்த நெல்மணிகள் எல்லாம் தற்போது பெய்து வரும் மழையில் முளைத்து விவசாயிகள் கண் முன்னே வீணாகிறது. நெல் கொள்முதலில் ஃபெயிலர் மாடல் திமுக அரசின் குளறுபடியால், நெல்மணிகள் மழையில் நனைந்து முளைவிட்டுள்ளன.

கூட்டுறவு சங்கத்தில் கடன் வாங்குவதில் சிக்கல், உரத் தட்டுப்பாடு, காலநிலை மாற்றத்தால் காலம் தவறிப் பெய்யும் மழை என்று பல்வேறு சவால்களைக் கடந்து விவசாயிகள் நெல்மணிகளை உற்பத்தி செய்கிறார்கள். ஆனால், அந்த நெல்மணிகளை உரிய நேரத்தில் கொள்முதல் செய்யக்கூட வக்கற்ற அரசாக திமுக அரசு திகழ்கிறது. முந்தைய திமுக. ஆட்சியில் நாள் ஒன்றுக்கு 800 மூட்டைகளாக இருந்த நெல் கொள்முதல், அஇஅதிமுக ஆட்சியில் 1000 மூட்டையாக அதிகரித்தும்; 17 சதவீதம் ஈரப்பதத்தை 22 சதவீதமாக உயர்த்தி, மத்திய அரசிடமிருந்து ஆணை பெற்றும் நெல்மணிகளை கொள்முதல் செய்தோம்.

ஆனால், ஸ்டாலின் மாடல் ஆட்சியில் நாளொன்றுக்கு 600 மூட்டைகள் மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதாகவும், நெல்லைப் பிடிக்க போதுமான சாக்குப் பைகள் இல்லை என்றும், நெல்லைப் பாதுகாக்க தார்ப்பாய்கள் இல்லை என்றும் விவசாயிகள் குற்றம் சாட்டுவதோடு, ஈரப்பதத்தை 17 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக உயர்த்தப்பட வேண்டும் என்றும், நெல் கொள்முதலை 1000 மூட்டைகளாக உயர்த்த வேண்டும் என்றும் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

இதையடுத்து பருவமழைக்கு முன்னதாகவே விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் என்று, அஇஅதிமுக சார்பில் பலமுறை எச்சரிக்கை விடுத்தோம். அதையெல்லாம் திமுக அரசு காதிலேயே போட்டுக்கொள்ளவில்லை.

இதனால், கொள்முதல் நிலையங்களுக்கு வெளியே சுமார் 2 கிலோமீட்டர் தூரம் வரை நெல்மணிகளை கொட்டிவைத்து விடியலுக்காக வழிமேல் விழி வைத்து காத்திருக்கிறார்கள் விவசாயிகள். நெல் மூட்டைகளை மழையிலிருந்து பாதுகாப்பதற்குத் தேவையான தார்ப்பாய்களைக்கூட விடியா திமுக அரசு கொடுக்கவில்லை. எனவே, மழையில் நனைந்து நெல்மணிகள் வீணாகும் கொடுமையையும், விவசாயிகளின் கண்ணீரையும் ஊடகங்கள் மீண்டும், மீண்டும் நேரலையாகக் காட்டிய பிறகும், இந்த தீயசக்தி திமுக அரசுக்கு இரக்கம் பிறக்கவில்லை.

சட்டமன்றத்தில் இது தொடர்பாக நான் இரண்டு நாட்களுக்கு முன்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தபோது, அதற்கு பதிலளித்துப் பேசிய உணவுத் துறை அமைச்சர் சக்கரபாணி, "தமிழ் நாட்டில் 25 இடங்களில் திறந்த வெளி



சேமிப்புக் கிடங்குகள் திறக்கப்பட்டுள்ளன. தற்போது, ஒரு நாளைக்கு ஆயிரம் மூட்டை நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.'' என்று சமாளிக்கிறாரே தவிர, முழுமையாக நெல்மணிகள் கொள்முதல் செய்வதற்கும், உரிய முறையில் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவில்லை.

மேலும், இப்போதே 22 சதவீத ஈரப்பத நெல்மணிகளை கொள்முதல் செய்வதற்கு ஒன்றிய அரசிடம் அனுமதி கேட்கலாமா என்ற அமைச்சர் கேட்பது அவரது அறியாமையைக் காட்டுகிறது. ஏனென்றால், இப்போதே பருவ மழை தொடங்கி அறுவடை செய்யப்பட்ட நெல்மணிகள் ரோட்டில் கிடக்கிறது, அறுவடைக்குத் தயாரான நெல்மணிகள், தண்ணீரில் மிதக்கின்றன. எனவே, இனியும் காலம் தாழ்த்துவதில் அர்த்தமே இல்லை.

மேலும், "செறிவூட்டப்பட்ட அரிசிக்கு ஒன்றிய அரசிடம் அனுமதி பெற்றுத் தந்தால் நெல் தேங்கும் நிலை ஏற்படாது. அரிசி பதுக்கல் இருக்காது'' என்று உண்மைக்கு மாறாக மத்திய அரசு மீது பழி சுமத்தியிருக்கிறார். உண்மை என்னவென்றால் கடந்த ஆகஸ்ட் 18 அன்றே மத்திய அரசு இதற்கான அனுமதி வழங்கிவிட்டது. இதை மறைத்து, மத்திய அரசு மீது குற்றம் சாட்டி விவசாயிகளையும் மக்களையும் ஏமாற்றுகிறது இந்த அரசு.

தமிழகத்தில் நெல் விளைச்சல் இந்த ஆண்டு அதிகம் என்று சட்டமன்றத்தில் பேசிய அமைச்சருக்கு, அதுபற்றி முன்பே தெரியாதா? விவசாயம் பற்றியும், ஒவ்வொரு பருவத்திலும் எந்த அளவுக்கு விளைச்சல் இருக்கும், இந்த ஆண்டு எவ்வளவு அதிகம் விளையும் என்பதைக்கூட கணிக்கமுடியாத ஒருவர், அமைச்சராக இருப்பதற்குத் தகுதி இருக்கிறதா..?

நெல் விளைச்சல் அதிகம் என்றால் அதற்கு ஏற்ப முன்கூட்டியே கொள்முதல் தொடங்கியிருக்க வேண்டாமா..? தேவையான அளவு கிடங்குகளை தயார் செய்திருக்க வேண்டாமா? குறைந்தபட்சம் மழையில் நனையாமல் பாதுகாப்பதற்கு தார்ப்பாய் போன்ற அடிப்படை வசதிகளையாவது செய்து கொடுத்திருக்க வேண்டாமா?

இவை எதையும் செய்யாமல், போட்டோஷூட் நடத்துவதற்கும், புதுப்புது பெயர் சூட்டுவதற்கும் மெனக்கெடுவதால் மட்டும் விவசாயிகளின் துயரம் தீர்ந்துவிடுமா..?. பருவ மழை தீவிரமாகியிருப்பதால் விவசாயிகளின் துன்பம் இரட்டிப்பாகிவிட்டது. டெல்டா மாவட்டம் மட்டுமின்றி தமிழகம் முழுக்க அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் வேதனைப்படுகிறார்கள்.

டெல்டா மாவட்டத்தில் மட்டும் பல ஆயிரம் ஏக்கரில் அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்கள் மழையில் நனைந்து வீணாகிப் போவதுடன், சுமார் 30 லட்சம் மூட்டை நெல்மணிகள் கொள்முதல் செய்யாமல் சாலையில் குவித்து வைத்து மழையில் நனைந்து வீணாகி வருகிறது. இதனால் விவசாயிகள் முழு நஷ்டம் அடைந்திருக்கிறார்கள்.

நாகையில் தொடர் மழை காரணமாக அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் குவித்து வைக்கப்பட்டிருந்த நெல் வீணாகி வருகிறது. இதைக் கண்டு விவசாயிகள் தமிழகம் முழுக்க சாலை மறியல், பஸ் மறியல் செய்யும் காட்சிகளை எல்லாம் தொலைக்காட்சிகளில் பார்க்க முடிகிறது.

மதுரை மாவட்டத்தில் 41 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை கடந்த செப்டம்பர் மாதமே திறப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டும், இதுவரை ஒரு நேரடி நெல்கொள்முதல் நிலையத்தைக் கூட திறக்கவில்லை.

பருவ மழைக்கு முன்பாக தப்பித்துவிடலாம், தீபாவளி பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடலாம் என்று ஆசையோடு காத்திருந்த விவசாயிகள், இப்போது போட்ட முதல் பணத்தைக் கூட எடுக்க முடியாமல் கண்ணீர் சிந்துகிறார்கள். தங்கள் வாழ்க்கையிலே இதுதான் இருண்ட தீபாவளி என்று விவசாயிகள் கண்ணீர் விடுகிறார்கள்.

தமிழகத்தில் கடந்த 2021ம் ஆண்டு முதல் 2023ம் ஆண்டுவரை மட்டும் 1,968 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டிருப்பதாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தெரிவிக்கிறது. தமிழக அரசின் நிர்வாகக் குளறுபடியால் இந்த எண்ணிக்கை தமிழகத்தில் அதிகரிக்கும் அபாயம் தென்படுகிறது.

எனவே, அதிக எண்ணிக்கையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதோடு, அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் செய்ததைப் போன்று தினமும் ஒவ்வொரு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திலும் 1000 மூட்டைகள் கொள்முதல் செய்ய வேண்டும் என்றும்; 22 சதவீதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் என்றும்; விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை மழையில் இருந்து பாதுகாக்கத் தேவையான தார்ப்பாய்களை வழங்கிட வேண்டும் என்றும், திமுக அரசை வலியுறுத்துகிறேன்.

திமுக அரசு, விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட நெல்மணிகளை விவசாயிகளிடத்தில் மிகப் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டு, மாபெரும் போராட்டத்தை இந்த அரசு சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று எச்சரிக்கிறேன்'' எனத் தெரிவித்திருக்கிறார்.



## பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் போர்நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டன: கத்தார் அறிவிப்பு

தோஹா, அக்.20-

பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் உடனடி போர்நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டதாக கத்தார் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கும், ஆப்கானிஸ்தானுக்கும் இடையே ஒரு வாரத்துக்கும் மேலாக நடந்த சண்டையில் பலர் உயிரிழந்தனர், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இதனையடுத்து ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானின் பிரதிநிதிகள் தோஹாவில் தங்களுக்கு இடையேயான மோதலை தீர்க்க பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த பேச்சுவார்த்தையில் கத்தார் மற்றும் துருக்கி நாடுகள் மத்தியஸ்தர்களாக செயல்பட்டனர்.

இதனை தொடர்ந்து, 'பேச்சுவார்த்தையின் போது, இரு தரப்பினரும் உடனடி போர்நிறுத்தத்துக்கும், இரு நாடுகளுக்கும் இடையே நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் வழிமுறைகளை நிறுவுவதற்கும் ஒப்புக்கொண்டனர்' என்று கத்தார் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து வெளிப்படும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், எல்லையில் அமைதி மற்றும் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் உடனடி நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தும் என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில், எல்லைப் பகுதிகளில் தாக்குதல்களை நடத்தும் போராளிகளுக்கு அடைக்கலம் கொடுப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டை ஆப்கானிஸ்தான் மறுத்துள்ளது. பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் இடையேயான 48 மணி நேர போர் நிறுத்தம் வெள்ளிக்கிழமை மாலையுடன் காலாவதியானது. இதன் அடுத்த சில மணி நேரங்களுக்குப் பிறகு, பாகிஸ்தான் எல்லையைத் தாண்டி தாக்குதல் நடத்தியது.

ஆப்கானிஸ்தானின் கிழக்கு பாக்டிகா மாகாணத்தில் இரண்டு மாவட்டங்களில் தாக்குதல்கள் நடந்ததாக பாகிஸ்தான் பாதுகாப்பு அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். பாகிஸ்தான் விமானப்படை நடத்திய தாக்குதலில் ஆயுதமேந்திய போராளிகள் மட்டுமே கொல்லப்பட்டனர் என்றும், பொதுமக்கள் யாரும் உயிரிழக்கவில்லை என்றும் அவர்கள் கூறினர்.

ஆனால் வான்வழித் தாக்குதல்களில் பெண்கள், குழந்தைகள் மற்றும் உள்ளூர் கிரிக்கெட் வீரர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டதாக ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர். பாக்டிகாவில் ஆப்கானிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டதை அடுத்து, பாகிஸ்தான் பங்கேற்கும் முத்தரப்பு தொடரில் இருந்து ஆப்கானிஸ்தான் விலகியது


## சென்னை மெட்ரோ ரயில் சேவையில் அக்.20 முதல் 5 நாட்களுக்கு மாற்றம்

**சென்னை, அக்.20–**

தண்டவாள பராமரிப்புப் பணிகள் காரணமாக மெட்ரோ ரயில் சேவையில் அக்.20 முதல் 24ம் தேதி வரை 5 நாட்களுக்கு மாற்றம் செய்யப்பட உள்ளது. இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வருடாந்திர முன்னுரிமை பராமரிப்பு பணிகளின் ஒரு பகுதியாக, பச்சை வழித்தடத்திலும், நீல வழித்தடத்திலும் தண்டவாள பராமரிப்புப் பணிகளை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மேற்கொள்ள உள்ளது. பாதுகாப்பு, நம்பகத்தன்மை மற்றும் சீரான ரயில் இயக்கத்தை உறுதிப்படுத்த இந்தப் பணி மிகவும் அவசியம்.

அதன்படி, பராமரிப்பு பணி அக்.20 முதல் 24ம் தேதி வரை காலை 5 மணி முதல் 6.30 மணி வரை நடைபெற உள்ளது. இந்த நேரத்தில் வழக்கமான 7 நிமிட இடைவெளிக்கு பதிலாக 14 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். காலை 6:30 மணிக்குப் பிறகு, மெட்ரோ ரயில் சேவைகள் வழக்கம்போல எவ்வித மாற்றமுமின்றி இயக்கப்படும். இந்த மாற்றங்கள் பச்சை வழித்தடம் மற்றும் நீல வழித்தடங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பகுதிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மொபைல் செயலி மற்றும் அதிகாரப்பூர்வ சமூக வலைதளங்கள் மூலம் அவ்வப்போது தகவல்களைத் தெரிந்துகொள்ளுமாறு பயணிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் உதவிக்கு, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் உதவி மையத்தை 18604251515 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் அல்லது www.chennaimetrorail.org என்ற இணையதளத்தைப் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




## நீதிமன்றம் குறித்து அவதூறுப் பேச்சு: சீமான் மீது 2 பிரிவுகளில் வழக்குப் பதிவு

சென்னை, அக்.20-

நீதிமன்றம் குறித்து அவதூறாக பேசிய புகாரில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது சென்னை திருமங்கலம் போலீசார் 2 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்துள்ளனர். நீதிமன்ற உத்தரவை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2024ம் ஆண்டு நவம்பர் மாதம் யூடியூப் சேனல் ஒன்றுக்கு சீமான் அளித்த பேட்டியில், அவர் நீதித்துறையை அவமதிக்கும் வகையில் பேசியதாக வழக்கறிஞர் சார்லஸ் அலெக்சாண்டர் போலீசில் புகார் அளித்திருந்தார். இதன் மீது போலீசார் நடவடிக்கை எடுக்காததால், இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் சார்லஸ் மேல் முறையீடு செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன் புகார் மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட்டார்.

நீதிமன்ற உத்தரவை அடுத்து, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது போலீசார் இன்று பிஎன்எஸ் பிரிவு 196 உட்பட 2 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.



## சபரிமலையில் அலைமோதிய பக்தர்கள் கூட்டம்

சபரிமலை, அக்.20-

சபரிமலை ஐயப்பன் கோயிலில் மாதாந்திர பூஜைக்காக நேற்று முன்தினம் மாலை நடை திறக்கப்பட்டது. பக்தர்கள் கூட்டம் வழக்கத்தை விட அதிகமாக இருந்தது.

வரும் 22ம் தேதி குடியரசு தலைவர் திரவுபதி முர்மு சபரிமலையில் ஐயப்பனை தரிசிக்க வருகிறார். இதனால் 21, 22ம் தேதி பக்தர்களுக்கான அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளது. 5 நாட்கள் வழிபாடு 3 நாளாக குறைந்ததால் பக்தர்களின் வருகை தற்போது அதிகரித்துள்ளது.

மேலும் தீபாவளிக்கு முன்னதாக தரிசனத்தை முடித்து பண்டிகைக்கு வீடு திரும்புவதிலும் பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் நேற்று சபரிமலையில் பக்தர்களின் வருகை வழக்கத்தை விட அதிகமாக இருந்தது. நிலக்கல், பம்பை, நடைப்பந்தல் உள்ளிட்ட பல பகுதிகளிலும் கூட்டம் அலைமோதியது. மேலும் மழையும் பெய்து கொண்டே இருந்ததால் பக்தர்களுக்கு பெரும் சிரமம் ஏற்பட்டது.

பொதுவாக மாதாந்திர வழிபாட்டு காலங்களில் பக்தர்களின் வருகை இந்தளவுக்கு இருக்காது. ஆனால் இம்முறை கூட்டம் வெகுவாக அதிகரித்துள்ளது.

இதுகுறித்து ஐயப்ப பக்தர்கள் கூறுகையில், சபரிமலையில் அடிப்படை வசதிகள் சரிவர செய்யப்படாததால் சிக்கல் ஏற்படுகிறது. பக்தர்களின் வருகையை முறைப்படுத்தி உரிய வசதிகளை செய்து தர வேண்டும் என்றனர்.

## தொடர் கனமழையால் பெரியாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 6 அடி உயர்வு



கனமழையால் முல்லை பெரியாறு அணை நீர்மட்டம் ஒரேநாளில் 6 அடி உயர்ந்தது. நீர்வரத்து 40 ஆயிரம் கனஅடியாக அதிகரித்ததால் எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டு, கேரள பகுதிக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

தமிழக கேரள எல்லையில் கனமழை பெய்து வருவதால் முல்லை பெரியாறு அணைக்கு நீர்வரத்து வேகமாக உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் காலையில் 2,748 கனஅடியாக இருந்த நீர்வரத்து இரவு 11 மணிக்கு 40 ஆயிரத்து 733 கனஅடியாக அதிகரித்தது. அணை நீர்மட்டம் 132 அடியில் இருந்து 138 அடியாக உயர்ந்தது.

முல்லை பெரியாறு அணையின் மதகுகள் கேரளப் பகுதியை நோக்கி அமைந்துள்ளன. தமிழகப் பகுதிக்கு அதிகபட்சமாக 2,400 கனஅடி நீர் மட்டுமே திறக்கும் வசதி உள்ளது. எனவே, வெள்ளப்பெருக்கு ஏற்படும்போதெல்லாம் கேரளப் பகுதிக்கு எச்சரிக்கை தகவல் அனுப்பப்பட்டு, அம்மாநிலம் வழியே உபரிநீர் திறக்கப்படுவது வழக்கம். மேலும், நீர்த்தேக்க கால அட்டவணைப்படி (ரூல் கர்வ்) தற்போது 137.75 அடி நீரே தேக்கும் நிலை உள்ளது.

எனவே, நேற்று இடுக்கி மாவட்டத்துக்கு முதல்கட்ட அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. தொடர்ந்து, காலை 8 மணிக்கு 3 மதகுகள் முக்கால் மீட்டர் உயர்த்தப்பட்டு விநாடிக்கு 5 ஆயிரம் கனஅடி வீதம் நீர் வெளியேற்றப்பட்டது. பின்பு அணைக்கான நீர்வரத்துக்கு ஏற்ப நீர் வெளியேற்றத்தின் அளவும் ஏற்ற, இறக்கத்துடன் இருந்தது. நேற்று மதியம் 1 மணிக்கு 7ஆயிரத்து 163 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது.

இந்த நீர் இடுக்கி மாவட்டம் வல்லக்கடவு, சப்பாத்து, வண்டிப்பெரியாறு, மஞ்சுமலை, உப்புத்துறை, ஏலப்பாறை வழியாக செல்வதால் அப்பகுதி மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆற்றங்கரையில் வசித்து வரும் 43 குடும்பங்கள் முகாமில் தங்க வைக்கப் பட்டனர். தமிழகப் பகுதிக்கு தற்போது விநாடிக்கு 1,400 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து நீர்வளத்துறை அதிகாரிகள் கூறும்போது, "ஏற்கெனவே தேனி மாவட்டத்தில் உள்ள ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. எனவே, முல்லை பெரியாறில் இருந்து குறைவான நீரே தமிழகப் பகுதிக்கு வெளியேற்றப்பட்டு வருகிறது'' என்றனர்.

## தொடர் மழையால் கொடைக்கானல் அருவிகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு



கொடைக்கானல், அக்.20-

கொடைக்கானல் மலைப் பகுதியில் நேற்று பெய்த தொடர் மழையால் அருவிகளில் நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

கொடைக்கானல் மலைப் பகுதியில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. நேற்று காலை முதல் மலைப் பகுதியில் பரவலாக மழை பெய்தது.

தொடர்மழை காரணமாக, வெள்ளி நீர்வீழ்ச்சி, எலிவால் அருவி, வட்டக்கானல் நீர் வீழ்ச்சி, தேவதை அருவி, அஞ்சுவீடு அருவி, கரடிச்சோலை அருவியில் நீர்வரத்து அதிகரித்து தண்ணீர் ஆர்ப் பரித்து கொட்டுகிறது. தொடர் மழையால் கொடைக்கானலில் இதமான தட்பவெப்பநிலை நிலவுகிறது.

நேற்று பகலில் பனிமூட்டம் அதிகரித்து காணப்பட்டது. அதனால் வாகனங்கள் முகப்பு விளக்கை எரிய விட்டுச் சென்றன. தொடர் மழையால் சுற்றுலா பயணிகள் விடுதி அறைகளிலேயே முடங்கினர். மலைப் பகுதியில் மழை காரணமாக, பழநியில் உள்ள அணை களுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பழநியிலும் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. இதனால் பகலில் வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000